**வடக்கு மாகாணத்திற்கான உள்ளூர் மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம் - 2011 சனவரி 31 முதல் திசெம்பர் 31 வரை.**

---

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான ஆரம்ப முற்பணம் மற்றும் மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மனிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, 2011 சனவரி 31 முதல் திசெம்பர் 31 வரையான காலத்திற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 24,841,242 ஆகும். மீளாய்வு காலத்தின் போதான செயற்திட்டச் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| **செலவின விடயம்** | **2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த பதினொரு மாத காலத்திற்கான செலவினம்** |
|---|---|
| **ஆக்கக் கூறு 1** | ரூபா |
| குறைநிரப்பு உணவு பங்குகள் வழங்கல் | 150,000 |
| **ஆக்கக் கூறு 2** | |
| இயலளவைக் கட்டியெழுப்புதலும் சமுதாய ஈடுபடுத்தலும் | 2,525,747 |
| **ஆக்கக் கூறு 3** | |
| சமுதாய அடிப்படை போசாக்கு தலையீடு | 22,027,729 |
| **ஆக்கக் கூறு 4** | |
| ஆலோசனை, செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 137,766 |
| | 24,841,242 |

### 2.2 விசேட (டொலர்) கணக்கு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வு காலத்தின் போதான விசேட (டொலர்) கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப முற்பணம் | 454,545 | 49,821,409 |
| கூட்டு :- வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 997,982 |
| | 454,545 | 50,819,391 |
| கழி :- பற்றுதல்கள் | 227,863 | 24,999,999 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 226,682 | 25,819,392 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 150,000 மற்றும் ரூபா 7,178,494 மற்றும் ரூபா 519,320 தொகையான முறையே ஆலோசனைக் கட்டணங்கள், பயிற்சிச் செலவினம் மற்றும் அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் என்பன ஒவ்வொரு ஆக்கக் கூறின் கீழும் நடைமுறையல்லாச் சொத்தாகக் காட்டுப்படுத்துவற்குப் பதிலாக நிலையான சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செலவினக் கூற்று (எஸ்ஓஈ) நிதிக் கூற்றுக்களில் புறம்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

(அ) திட்டம் மற்றும் கண்காணித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வு காலத்தின் போது செயற்திட்டத்தால் ரூபா 16.99 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த

போதிலும் 1989 யூன் 16 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின்படி, நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2002 நவம்பர் 28 ஆந்திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின்படி கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருளுக்கான நிலையான சொத்துப் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்டம் வெற்றிகரமாக அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டில் தெளிவுபடுத்தும் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் தெளிவுபடுத்துகின்ற முழுச் செயற்திட்ட காலத்தை உள்ளடக்கி அனைத்தையும் அடக்கிய ஒட்டு மொத்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அத்தகைய திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) எய்த வேண்டிய இலக்குடன் தொடர்புடைய பிரதான பதவியிணியினரின் பொறுப்பை தெளிவாக இனங்காணும் செயல் நடவடிக்கைத்திட்டம் மற்றும் மீளாய்வு காலத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பாதீட்டு ஒதுக்கீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே அமைக்கப்பட்ட நோக்கங்களை அடையும் நோக்கில் சரியான வடிவம் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் மாற்றங்களைச் செய்வதற்கும் செயற்திட்டம் முழுவதற்குமான முன்னேற்றத்தை முறைப்படி மதிப்பாய்வு செய்யமுடியவில்லை.

### 3.3 நிதிகளின் பயன்பாடு

------------------------------

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின்படி. காலப் பகுதிக்காக கிடைத்த ரூபா 300,000,000 ஆன நிதிகளில், ரூபா 24,841,242 ஆன தொகை மாத்திரமே மீளாய்வு காலத்தின் போதான செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வகுதி | விபரம் | காலத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை | உண்மையாக பயன்பாடுத்ப்பட்ட தொகை | பயன்படுத்தாத தொகை | நிதிகளின் பயன்பாட்டு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| 01 | வேலைகள் | 11,500,000 | - | 11,500,000 | 0 |
| 02 | நிலையான சொத்துக்கள் | 248,000,000 | 16,993,428 | 231,006,572 | 07 |
| 03 | ஆலோசனை சேவைகள் | 11,000,000 | 150,000 | 10,850,000 | 01 |
| 04 | பயிற்சி | 4,600,000 | 7,178,494 | - | 156 |
| 05 | செயற்பாட்டுக் கிரயம் | 24,900,000 | 519,320 | 24,380,680 | 02 |
| | | 300,000,000 | 24,841,242 | 277,737,252 | 8 |

பயிற்சியின் கீழான பாதிடப்பட்ட தொகையை விட கூடுதலாக ரூபா 2,578,493 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவுத் திட்ட அமுலாக்கல்

(இ) நிலையான சொத்துக்கள் மற்றும் பயிற்சிக்கான கொடுப்பனவுகள்